பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 04 சனிக்கிழமை 20.08.2022 கதிர் 176

## முட்டைக்குக் கட்டுப்பாட்டு விலை

### வெளிவந்தது வர்த்தமானி

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்து நுகர்வோர் விவகார அதிகார சபையால் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, வெள்ளை முட்டை

☞2

# கிழக்கில் 18 அதிகாரிகளுக்கு 'வட்ஸ் அப்'பில் இடமாற்ற உத்தரவு

## ஆளுநருக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு



கொழும்பு, ஒக. 20

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் 18 பேருக்கு அவசரமாக 'வட்ஸ் அப்' மூலம் திடீர் இடமாற்றக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆளுநர் அனுராதா யகம்பத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ஆ.மன்சூர் இடமாற்றத்துக்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஆனால், இடமாற்றக் கொள்கைக்கு முரணான வகையிலான இந்த உத்தரவுகளை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இந்தக் கடிதத்தைச் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

# இலங்கையில் மோசமான பொருளாதார நெருக்கடி!



## கர்ப்பிணிப் பெண்கள் பெரிதும் பாதிப்பு என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை

**இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாட்டின் சுகாதார கட்டமைப்பை வீழ்ச்சியின் இறுதிக்கட்டத்துக்கு இட்டுச் சென்றுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

**இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக - பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உள்ளது எனவும், இந்த நிலைமை கர்ப்பிணிப் பெண்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ளது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

☞2

## வடமராட்சி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சிப் பிரதேசத்தில் கள்ள மண் ஏற்றிய கன்டர் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்தவராவார்.

இன்று அதிகாலை வேளையில் திருட்டு மண் ஏற்றியவாறு மிக வேகமாகப் பயணித்த கன்டர் வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதன்போது வாகனத்தில் இருந்த சாரதி உட்பட இருவர்

☞2

## கொரோனா மரணம் 35 வீதத்தால் உயர்வு



உலகெங்கும் கடந்த 4 வாரங்களில் கொரோனா இறப்பு 35 வீதத்தால் அதிகரித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனாப் பாதிப்பு தொடர்ந்து வருகின்றது. தொற்று பாதிப்பைக் குறைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

☞2

## கோட்டாபய வெளிநாடுகளில் ஏன் ஒளிந்து வாழ வேண்டும்?

### இலங்கைக்கு வரும் அவர் அரசியலில் ஈடுபடமாட்டார் என பிரசன்ன நம்பிக்கை



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, வெளிநாடுகளில் ஒளிந்து வாழ்வதை அனுமதிக்க முடியாது. நாடு திரும்பும் அவர் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் எதனையும் அறிவிக்கவில்லை. அரசியலுக்கு வரும் முடிவை அவர் எடுப்பார் என நான் நம்பவில்லை.

- இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு இருக்கும் சுதந்திரம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும்

☞2

## அனைத்து மாவட்டங்களிலும் முப்படையினர் களமிறக்கம்!


வெளியானது அதிவிசேட வர்த்தமானி

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும், பொதுமக்கள் அமைதியைப் பேணுவதற்காக, ஆயுதம் தாங்கிய முப்படையினரை ஈடுபடுத்துவதற்கான

☞2

## அடுத்த வாரம் இலங்கைக்கு வரும் சர்வதேச நாணய நிதியத்தின் குழு

### கடன் வழங்கல் குறித்து தீவிர பேச்சு



பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள், கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவின் விஜயம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமையவுள்ளது என்று இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய

☞2

### 'மொட்டு'வுடன் இணைந்து செயற்படுமாறு

## பஸில் அழைப்பு; பீரிஸ் நிராகரிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அதன் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு

☞2

## மருந்துத் தட்டுப்பாடு பற்றி ஆராய மூவரடங்கிய குழு



நாட்டில் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மூவரடங்கிய குழுவை நியமித்துள்ளது.

இந்தத் தொழில்நுட்பக் குழுவினூடாக,

☞2

## திருமலை விபத்தில் மூவர் பரிதாபச் சாவு

திருகோணமலை, மூதூர் - பச்சனூர் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் சிலர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கோட்டாபய வெளிநாடுகளில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும். அவர் தனது அமெரிக்க குடியுரிமையைத் துறந்து, இந்த நாட்டுக்காகப் பணியாற்றினார். எனவே, அவர் வெளிநாடுகளில் ஒளிந்து வாழ்வதை அனுமதிக்க முடியாது. இது அவரது மனித உரிமை மீறலாகும்.

எனவே, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர் இந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

அதேபோன்றுஇடைக்காலஅரசையோ அல்லது இடைக்கால நிர்வாகத்தையோ விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தோம். ஏனெனில், இந்தப் பிரச்சினையை மேலும் இழுத்தடிக்க அனுமதிக்க முடியாது.

நாடு டொலர் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது.

இன்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு நாடாளுமன்றத்தில் 145 எம்.பிக்கள் உள்ளனர் - என்றார்.

## பஸில் அழைப்பு; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் வாக்கெடுப்பில் பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது எனப் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்திருந்தார். இருப்பினும் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் எதிர்த்தரப்பு வேட்பாளரான பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

அத்துடன் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கும் எதிராக அவர் வாக்களித்திருந்தார்.

இவ்வாறான காரணிகளால் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜி.எல் பீரிஸுக்குக் கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறும், கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து அவரை நீக்குமாறும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க கட்சியின் உயர்மட்டம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுஜன பெரமுனவின் வருடாந்த மாநாட்டின் முக்கிய தீர்மானங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக கொடவேஹா, சன்ன ஜயசுமன, டிலான் பெரேரா உட்பட பொதுஜன பெரமுனவின் 10 உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனித்துச் செயற்படும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல் பீரிஸுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதனை ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார். அதேவேளை, தனது தரப்பினருடன் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை அறிவிக்கவுள்ளார் என்றும் பஸில் ராஜபக்ஷவிடம் அவர் தெரிவித்துள்ளார்.

## மருந்துத் தட்டுப்பாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துத் தட்டுப்பாடு பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான உதவியை வழங்க எதிர்பார்ப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

## அடுத்த வாரம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீற்றர் புருயர் மற்றும் இலங்கைக் குழுவின் தலைவர் மசாஹிரோ நொசாகி ஆகியோர் தலைமையில் இந்தக் குழு வழிநடத்தப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுக்கான பணிக்குழாம் மட்ட ஒப்பந்தத்தை நோக்கி முன்னேறுவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் பொதுக் கடன் நிலைத்தன்மையற்றது என மதிப்பிடப்படுவதால், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின், விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஒப்புதலுக்கு, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக, இலங்கையின் கடன் வழங்குநர்களின் போதுமான உத்தரவாதங்கள் அவசியமாகும்.

இந்த விஜயத்தின்போது சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், ஏனைய பங்குதாரர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர் என்று அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அனைத்து மாவட்டங் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12ஆம் பிரிவினால், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளைமறுதினம் (22) திங்கட்கிழமை முதல் 25 மாவட்டங்களிலும் பாதுகாப்புக்காக முப்படையினரையும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொரோனா மரணம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், கொரோனாத் தொற்றுடன் வாழக் கற்றுக்கொண்டதால் தொற்றுப் பாதிப்பு இல்லை என்று எடுத்துக்கொள்ள முடியாது. தற்போது பாதிப்பு அதிகரித்து வருகின்றது. நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், மற்றவர்களைப் பாதுகாக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகம் முழுவதும் கடந்த நான்கு வாரங்களில் கொரோனா, குரங்கம்மை உள்ளிட்ட உலகளாவிய நோய்கள் தொடர்பான இறப்புக்கள் 35 வீதத்தால் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் மட்டும் கொரோனாவுக்கு 15 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். தடுப்பூசி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருக்கும்போது இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே, அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுங்கள். சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் ஆகியவற்றைப் பின்பற்றுங்கள் என்று கூறினார்.

மேலும், குரங்கம்மை குறித்து பேசிய அவர், கடந்த வாரம் 7,500 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதியாகியுள்ளது. முந்தைய வாரத்தைவிட பாதிப்பு 20 வீதம் அதிகமாகும். தற்போது வரை 92 நாடுகளில் 35 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 பேர் உயிரிழந்துள்ளனர் - என்றார்.

## வடமராட்சி விபத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட இருவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## முட்டைக்குக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும், சிவப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய விலையை விட அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

## இலங்கையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின் உபகரணங்கள், மருந்துப் பற்றாக்குறை என்பன காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் கர்ப்பிணிப் பெண்கள் போசாக்கற்ற உணவு மற்றும் உணவுத் தட்டுப்பாட்டால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை மேலும் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகைமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டா வழியில் ரணில்

இலங்கையில் கடந்த 44 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உண்மையில் இலங்கையின் சட்ட, நீதித் துறைக்கே பேரிழுக்கான விடயம்.

மிகக் கொடூரமானது, மிகப் பயங்கரமானது மனித மாண்புகளுக்கே முரணானது, மனிதாபிமானமே அற்றது இந்தச் சட்டம் என்பது உலகம் வெளிப்படையாக – நேரடியாக – விமர்சிக்கும் அம்சம்.

இந்தச் சட்டம் மிக கொடூரமானது (Draconian Law) என்பதை நல்லாட்சி அரசின் காலத்தில் அப்போதைய பிரதமர் – இப்போதைய ஜனாதிபதி –ரணில் விக்கிரமசிங்கவே ஒப்புக்கொண்டிருந்தார்.

அந்தச் சட்டத்தை முழுமையாக மாற்றி அமைப்பேன் என்று ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலிலும், பிற சர்வதேச தளங்களிலும் ரணிலின் நல்லாட்சி அரசு உட்பட தொடர்ந்து அதிகாரத்தில் இருந்த இலங்கை அரசுகள் அண்மைக்காலத்தில் உறுதி அளித்து வந்தன. கண்துடைப்புக்கு ரணிலின் நல்லாட்சி அரசு மூலம் அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க முயற்சி எடுக்கப்பட்டது. அதுவும் அரை வழியில் செத்துப் போனது. கோட்டாபயவின் ஆட்சியிலும் பூசி மெழுகும் முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டன.

புலிகளின் – தமிழர்களின் – விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதம் என்று அடையாளப்படுத்திய பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கு அரசுகள், அந்தப் பயங்கரவாதத்தை அடக்க, முள்ளை முள்ளால் எடுக்கும் போக்கில் அரச பயங்கரவாதத்தை பதிலடியாகக் கட்டவிழ்த்து விட்டன. அரச பயங்கரவாதக் கொடூரச் செயல்களுக்கு சட்டமூலம் பூசி, அவற்றை நியாயப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட கொடூரச் சட்டமே இது. இவ்விடயம் ஊரறிந்த இரகசியம்.

தமிழர்களின் சுதந்திர உணர்வை அடக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் இலக்கை – அடக்குமுறை நோக்கங்களை – அடையவே பயங்கரவாத தடுப்புச் சட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது என்று தமிழர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்தனர்.

தமிழர்களுக்கு எதிராகத் தானே அது பயன்படுத்தப்படுகின்றது, நமக்கென்ன என்று விட்டேத்தியாக இருந்த சிங்களத்தின் மீது, இப்போது அதே போன்ற அரசியல் நோக்கத்திற்காக அதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிரயோகிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது தென்னிலங்கைக்கு உண்மை விளங்கத் தொடங்கி இருக்கும்.

ஆட்சி மாற்றத்துக்கு எதிரான பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து அந்தப் போராட்டத் தலைவர்கள் மீது இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் பாய்ந்திருக்கின்றது.

பௌத்த சிங்கள ஆட்சித் தலைவர்கள் தங்கள் அரசியல் தேவைகளுக்காக இந்தக் குரூரச் சட்டத்தை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இது நல்லதோர் உதாரணம்.

மக்கள் எழுச்சி போராட்டம் நடத்திய மாணவர் தலைவர் மீது இந்தச் சட்டத்தை ஏவியமை மூலம் தமது அரசும் கோட்டாபய ராஜபக்ஷவினுடையது போன்று எதேச்சதிகாரத்திலேயே பயணிக்கப் போகின்றது என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நடந்து முடிந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களெழுச்சிப் போராட்டத்திற்கு எதிராக இரும்பு கரங்களை ஏவி விட்டிருக்கும் ரணில், இந்த நாட்டில் இன்னொரு கொடுங்கோல் ஆட்சியாளராக தாமும் மாறப்போகிறார் என்பதை இந்தக் கட்டியங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார் என்று எண்ணத் தோன்றுகின்றது.



## பெண்கள் உரிமைகளை தாமாகவே குரல் கொடுக்கும் பெண்கள் குழு உருவாக்கம்

பெண்கள் உரிமைகளை தாமாகவே குரல் கொடுக்கும் வகையில் வடக்கு மாகாண பெண்கள் குழு உருவாக்கம் செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஆரம்பமாக, பிரதேச செயலக பிரிவுகளில் பெண்கள் குழுக்களை ஆரம்பிக்கும் நோக்குடன், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று (வெள்ளிக்கிழமை) பெண்கள் குழு ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச குழுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ந்து அந்தக் குழுக்களிலிருந்து மாவட்ட குழு உருவாக்கப்பட்டு, பின்னர் மாவட்ட குழுக்களிலிருந்து மாகாண குழு நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேகநபரிடமிருந்து கஞ்சா மீட்பு!

பொலிஸாரால் கைதான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் வசமிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகளின் அடிப்படையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரை பிடிப்பதற்காக அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டிருந்த நிலையில் சந்தேகநபர் வியாழக்கிழமை கைதாகினார்.

இதன் போது நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு நீண்டகாலமாகத் தலைமறைவாக இருந்த மருதமுனை வி.சி. வீதியை சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் கைதானதுடன் அவர் வசம் 1200 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைதான சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 10 சதவீதம் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 10 சதவீதம் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவற்றுள் அத்தியாவசிய மருந்துகள் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும் சிகிச்சைகள் எந்த வகையிலும் நிறுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வவுணதீவில் விபத்து




வவுணதிவில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் வவுணதீவு பெற்றோல் நிரப்பு நிலையத்தில் இருந்து வந்த பிரதேச சபை தவிசாளரின் டிப்பர் வாகனமும் நேற்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

வவுணதீவில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தவிசாளரின் டிப்பர் வாகனத்துடன் மோதியதாகக் கூறப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த இருவரும் காயங்களுக்கு உள்ளாகினர். இருவரும் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள நாவற்காடு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை வவுணதீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சோமாலியாவில் தீவிரவாதிகளின் திடீர்த் தாக்குதலில் எண்மர் சாவு

மொகடிசு,ஓக.20

சோமாலியாவில் உள்ள ஹோட்டலில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.


கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல்கொய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய அல்பாப் என்ற தீவிரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட சோமாலிய அரசை கவிழ்க்க முயற்சித்து வருகிறது.

இதன் காரணமாக அரசுப்படைகள் மற்றும் பொதுமக்களை குறிவைத்து இந்த அமைப்பு அவ்வப்போது வன்முறை தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் அப்பாவி பொதுமக்கள் பலர் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் தலைநகர் மொகடிசுவில் உள்ள தனியார் ஹோட்டலைக் குறிவைத்து இருமுறை குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது. அதன்பின், ஹோட்டல் உள்ளே புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு அல்கொய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய அல்பாப் பயங்கரவாத அமைப்பு பொறுப் பேற்றுள்ளது.





## அமெரிக்காவில் நடுவானில் மோதி எரிந்து வீழ்ந்த இரு விமானங்கள்!

அமெரிக்காவில் நடுவானில் இரு விமானங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் வாட்சன்வில்லே நகரில் உள்ள விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக ஒற்றை என்ஜின் கொண்ட 'செஸ்னா 152' மற்றும் இரட்டை என்ஜின் கொண்ட 'செஸ்னா 340' ஆகிய 2 சிறிய ரக விமானங்கள் வந்து கொண்டிருந்தன. எதிர்எதிர் திசையில் இருந்து வந்து கொண்டிருந்த இந்த விமானங்கள் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது எதிர்பாராத விதமாக நடுவானில் நேருக்கு நேர் மோதின. மோதிய வேகத்தில் 2 விமானங்களும் தீப்பிடித்து எரிந்துவாறு விமான நிலையத்துக்குள் விழுந்து நொறுங்கின. 'செஸ்னா 152' விமானத்தில் ஒரு விமானியும், 'செஸ்னா 340' விமானத்தில் விமானி உள்பட 3 பேரும் இருந்தனர் என கூறப்படும் நிலையில் இந்த விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்தனர். படுகாயம் அடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தநிலையில் அவரும் உயிரிழந்தமையால் பலி எண்ணிக்கை 3 ஆக உயர்ந்தது.

## போதையில் நண்பர்களுடன் குத்தாட்டம் போட்ட பின்லாந்து இளவயதுப் பெண் பிரதமர் சிக்கலில்!

ஹெல்சிங்கி,ஓக.20

மதுபோதையில் நண்பர்களுடன் குத்தாட்டம் போட்ட வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலானதால் பின்லாந்து பிரதமர் சன்னா மரின் பதவி விலக வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பின்லாந்து நாட்டில் ஆளும் சோசியல் டெமாக்ரடிக் கட்சியின் பிரதமராக 36 வயது பெண்ணான சன்னா மரின் பதவி வகித்து வருகிறார்.

கடந்த 2019ம் ஆண்டு தனது 34 ஆவது வயதில் பின்லாந்தின் பிரதமராக பதவி யேற்றதன் மூலம் உலகின் இளம் வயது பிரதமர் என்கிற பெருமையை பெற்றவர் இவர்.

இந்த நிலையில் சன்னா மரின் தொடர்பான வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலானதை தொடர்ந்து அவரது பிரதமர் பதவிக்கு நெருக்கடி ஏற்பட்டது. சன்னா மரின் தனது வீட்டில் நண்பர்களுடன் சேர்ந்து உற்சாகமாக பாடி, நடனம் ஆடும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. நண்பர்களுடன் குத்தாட்டம் வீடியோவை பார்த்த பலரும் சன்னா மரின் போதைப் பொருளை உட்கொண்டு நண்பர்களுடன் குத்தாட்டம் போட்டார் எனக் குற்றம் சாட்டி கடுமையாக விமர்சனம் செய்தனர். குடிமக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டியே நாட்டின் பிரதமரே இவ்வாறு நடந்து கொள்வதா என எதிர்க் கட்சிகள் சாடின.

அதுமட்டுமன்றி சன்னா மரின் போதைப்பொருளை



பயன்படுத்தினரா என்பதை பரிசோதிக்க வேண்டும் எனவும், பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட அவர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த சர்ச்சையால் சன்னா மரினின் பிரதமர் பதவிக்கும், ஆளும் சோசியல் டெமாக்ரடிக் அரசுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனினும் விமர்சனங்களுக்கு பதிலளித்து பிரதமர் சன்னா மரின் தான் எந்த போதைப்பொருளையும் பயன்படுத்தவில்லை என்றும் சட்டத்துக்கு புறம்பாக எதையும் செய்யவில்லை என்றும் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நான், என் நண்பர்களுடன் இணைந்து பார்ட்டி தான் செய்தேன். நான் எந்தப் போதைப் பொருள்களையும் பயன்படுத்த வில்லை. எனது தனிப்பட்ட வீடியோ பொதுவெளியில் பகிரப் பட்டுள்ளதை நினைத்து நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். ஆம், மாலை வேளையில் என் நண்பர்களுடன் இணைந்து பார்ட்டியில் கலந்து கொண்டேன். நடனம் ஆடினேன், பாட்டு பாடினேன். மது உட் கொண்டேன். ஆனால், நான் எந்தப் போதைப்பொருளையும் பயன்படுத்தவில்லை. நான் செய்தது எல்லாம் சட்டத்துக்கு உட்பட்டவைதான் எனக் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், போதைப்பொருள் தொடர்பாக பரிசோதனை நடத்துவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதேபோல் எனது நடத்தையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இப்போது இருப்பதுபோலவே இருக்க விரும்புகிறேன். அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகிறேன் என்றார்.

முன்னதாக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா தொற்று விதிமுறைகளை மீறி சன்னா மரின் இரவு நேர கேளிக்கை விடுதிக்கு சென்று பொழுதை கழித்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியும், இதற்காக அவர் மன்னிப்பு கோரியமையும் குறிப்பிடத் தக்கவை.

## இளைஞர்கள் அதிகளவு மது குடிக்க வேண்டும் ஜப்பான் அரசின் அறிவிப்பால் சர்ச்சை

ஜப்பானில் கொரோனா பொது முடக்கத்துக்கு பிறகு இளைஞர்களிடம் மது அருந்தும் பழக்கம் குறைந்து உள்ளது. மூத்த தலைமுறையினரோடு ஒப்பிடும் போது இளைஞர்கள் குறைவாகவே மது அருந்துகின்றனர். இதனால் அரசுக்கு வரி வருவாயில் அதிகளவு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு இளைஞர்கள் மது அருந்துவது குறைந்ததுதான் காரணம் என்பதை அந்நாட்டின் தேசிய வரி முகமை அமைப்பு கண்டறிந்தது. ஜப்பானில் 1995ம் ஆண்டு காலகட்டத்தில் ஒரு நபர் சராசரியாக ஆண்டுக்கு 100 லிற்றர் மது அருந்தி வந்துள்ளார். 2020ம் ஆண்டுக்கு ஒரு நபர் ஆண்டு 75 லீற்றர் மது அருந்தி உள்ளார். இதையடுத்து வரி வருவாயை பெருக்க இளைஞர்கள் அதிகளவு மது குடிக்க வேண்டும் என்று ஜப்பான் அரசு அறிவுறுத்தி இருக்கிறது. இதற்காக சேக் விவா என்ற பிரசாரத்தை தொடங்கியுள்ளது. இந்த பிரசாரம் மூலம் குடிப்பழக்கத்தை இளைஞர்களிடம் பிரபலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 20 முதல் 39 வயதுள்ள ஜப்பானியர்களிடம் குடிப்பழக்கத்தை அதிகரிக்க என்ன செய்யலாம் என யோசனைகள் கேட்கப்பட்டு உள்ளன. மது விற்பனையை அதிகரிக்க புதிய யோசனைகள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக போட்டி ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிறந்த யோசனைகள் வழங்குபவர்களுக்கு பரிசு, விருது வழங்கப்படுகிறது. இப்போட்டி செப்டெம்பர் 9ம் திகதி வரை நடத்தப்படுகிறது. 2011ம் ஆண்டு ஜப்பான் நாட்டின் வரி வருவாயில் 3 சதவீதம் மது விற்பனையில் இருந்து வந்துள்ளது. இது 2020ம் ஆண்டு 1.7 சதவீதமாக சரிந்தது. கொரோனாவுக்கு முன்பு பெரும்பாலானோர் பார்களுக்கு சென்று மது அருந்தி வந்தனர். கொரோனாவுக்கு பிறகு வீட்டில் இருந்தே பணிபுரிந்ததால் வெளியில் சென்று மது அருந்துவது குறைந்தது. அந்த நிலை இளைஞர்களிடம் தொடர்ந்து வருகிறது. இதனால் இளைஞர்களிடம் மது குடிப்பதை அரசு ஊக்குவிக்கிறது. பல நாடுகளில் மது விற்பனைக்கு தடை விதிக்க கோரி வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், மதுவை ஊக்குவிக்கும் ஜப்பான் அரசின் இந்த அறிவிப்பால் சர்ச்சை எழுந்துள்ளது. இந்த முடிவுக்கு பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# மதுராவில் கிருஷ்ண ஜெயந்தி நெரிசலில் சிக்கி இருவர் சாவு



மதுரா கோவிலில் நெரிசலில் சிக்கி இரண்டு பக்தர்கள் மூச்சு திணறி பலியாகினர்; ஆறு பேர் காயமடைந்தனர்

கிருஷ்ணர் பிறந்த இடமாகக் கருதப்படும் மதுரா வீடு-பான்கே பிகாரி என்ற கோவிலில் கிருஷ்ண ஜெயந்தி விழாவையொட்டி நேற்று நள்ளிரவு விசேட பூஜை நடந்தது. இதில் பங்கேற்பதற்காக ஏராளமான பக்தர்கள் திரண்டனர். கோவில் நடை திறக்கப்பட்டதும் பக்தர்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்தனர்.

அப்போது கடுமையான நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி சில பக்தர்கள் தடுமாறி கீழே விழுந்தனர். அப்போது கூட்டத்துக்குள் மாட்டிக்கொண்ட ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் மூச்சு திணறி பரிதாபமாக இறந்தனர். 6 பேர் காயம் அடைந்தனர்.

காய்முற்றவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பொலிஸ் விசாரணை நடந்து வருகிறது.

## ராஜீவின் பிறந்த தினத்தில் ராகுல், பிரியங்கா அஞ்சலி



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் 78 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வீரபூமியில் உள்ள அவரது நினைவிடத்தில் அவரது பிள்ளைகளான காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் இன்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இவர்களோடு, ராபர்ட் வதேரா, கேசி வேணுகோபால் எம்.பி., லோபி மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோரும் ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், அவரது பிறந்தநாளில், நமது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எனது மரியாதை என்று பதிவிட்டுள்ளார்.

## டெல்லி துணை முதலமைச்சர் மீது மோசடி தொடர்பாக வழக்குப்பதிவு



டெல்லியில் முதலமைச்சர் அரவிந்த்கெஜ்ரிவால்தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெற்றுவருகிறது. மாநிலத்தின்துணைமுதலமைச்சராக பணியாற்றிவரும் மணீஷ் சிசோடியாவின் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தியிருந்தனர்.

மதுபான உரிமம் வழங்குவதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக பதியப்பட்ட வழக்கிலேயே மணீஷ் சிசோடியாவின் வீடு உள்பட 21 இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தினர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தநிலையில், மணீஷ் சிசோடியா மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

புதிய மதுக்கொள்கை முறைகேடு தொடர்பான புகாரில் டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா உள்ளிட்ட 16 பேர் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. துணை முதலமைச்சரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டதற்கு முதலமைச்சர் கெஜ்ரிவால் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## தாயின் தனிமையைப் போக்க திருமணம் செய்து வைத்த மகள்



தனது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த மகள் தாய்க்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்தார் மகள்.

கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர் ரதிமேனன் (வயது 59). இவரது கணவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார்.

இவர்களுக்கு இரு மகள்கள் உண்டு. இருவருக்கும் திருமணமான நிலையில், ரதிமேனன் தனிமையில் வசித்து வந்தார்.

இந்தநிலையில் தனது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த ரதிமேனனின் மகள் பிரசிதா, கண்டிப்பாக தனது தாயாருக்கு ஒரு துணை வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினார்.

இதற்காக தனது தாய்க்கு திருமணம் செய்து வைத்து விடலாம் என்று அவர் முடிவு செய்தார். இதற்காக தகுந்த மணமகனைத் தேட ஆரம்பித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த மனைவியை இழந்து தனிமையில் வாழ்ந்து வந்த திவாகரன் (வயது 63) என்பவர்தான் தனது தாய்க்கு ஏற்ற துணை என்று பிரசிதா முடிவு செய்தார். இரு மகள்களுக்குத் தந்தையான திவாகரன் வேளாண் பல்கலைக்கழகத்தில் பணி செய்து ஓய்வு பெற்றவர். அவரிடம் தனது தாயின் தனிமை பற்றியும், அவருக்கு ஒரு துணை வேண்டும்,

அது நீங்களாக இருந்தால் மிகவும் நல்லது என்று உருக்கமாக கூறினார் பிரசிதா. இதனை புரிந்து கொண்ட திவாகரன் இரண்டாவது திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார்.

திவாகரனின் மனநிலை குறித்து அவரது இரு பெண்குழந்தைகளிடமும் பிரசிதா பேசினார். அவர்களும் தந்தையின் திருமணத்திற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை.

இதை தொடர்ந்து, தனது தாய் ரதிமேனனின் சம்மதத்தை பெற்ற அவர் திருச்சூர் திருவம்பாடி கோவிலில் இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைக்க முடிவு செய்தார். அதன்படி உற்றார், உறவினர்கள் முன்னிலையில் திருமணத்தை நடத்தி முடித்தார்.

தாய்க்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்து அழகு பார்த்த பிரசிதா கூறியவைவருமாறு:-எனது அம்மாவுக்கு நாங்கள் இரு பெண் குழந்தைகள். அப்பா உயிரோடு இருக்கும்போதே எங்கள் இருவருக்கும் திருமணமாகி விட்டது.

நாங்கள் அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் அப்பா திடீரென்று மரணம் அடைந்தமையால் அம்மா தனிமையானார். எங்களுக்கும் கணவர், குழந்தைகள் என ஆனதால் அம்மாவை அடிக்கடி நேரில் வந்து பார்க்க முடியவில்லை. அம்மாவின் தனிமை நிலையைப் போக்க வேண்டும் என்று யோசித்தேன். அதற்காகத்தான் இந்த திருமண ஏற்பாடு செய்யப்பட்டது. - இவ்வாறு அவர் கூறினார்.



## உத்தரப் பிரதேசம் லக்னோவில் 5.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம்

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோ மற்றும் அதை ஒட்டிய பல மாவட்டங்களில் இன்று அதிகாலையில் 5.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் குலுங்கின.

நில அதிர்வு உணரப்பட்டதை அடுத்து, மக்கள் வீட்டைவிட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர். நிலநடுக்கம் குறித்து உறுதி செய்த அதிகாரிகள், உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம் அதிகாலை 1.12 அளவில் ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது. இதன் மையம் நேபாளத்தின் பஹ்ரைச் மாவட்டத்தில் 82 கி.மீ. ஆழத்தில் இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இல்மனைட் அகழ்வு?

## மக்கள் பாதிக்கப்படுவர் என அச்சம்

(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்டத்தில் தனித்துத் தமிழர்களே வாழும், பெரிய நிலப்பரப்புடன் கூடிய திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கான நடவடிக்கைகள் மீண்டும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன எனத் தெரியவருகிறது.

இந்தப் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு வேலைக்கு என்று கடந்த ஏழு வருடங்களாக ஒரு குறிப்பிட்ட பாரிய நிறுவனம் (தம்சிலா நிறுவனம்) பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

அப்பகுதிமக்கள்பெரும்எதிர்ப்பைவெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதன் காரணமாக அவை நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனால், இப்போது இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடியை மையமாக வைத்து அரசாங்கத்துக்கு வருவாய் சேர்க்கும் நோக்குடன் மீண்டும் அகழ்வு பணியைத் தொடங்கும் முயற்சிகள் மீண்டும் முளை விட்டிருக்கின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் தம்பட்டை தொடக்கம் உமிரி வரைக்கும் இந்த நிகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என தெரியவருகிறது.

இருந்தாலும், சனச்செறிவு கூடிய பிரதேசங்களான தம்பட்டை தொடக்கம் விநாயகபுரம் போன்ற பகுதிகளில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ள முடியாது என்று கூறப்பட்ட காரணத்தினால், தற்போது விநாயகபுரம், கோரைக்களப்பு தொடக்கம் உமிரி வரைக்குமான சுமார் 4 கிலோ மீற்றர் தூரக் கடலோர பகுதி இல்மனைட் அகழ்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

எனினும், அந்தப் பிரதேச மக்கள் தங்களது எதிர்ப்புகளைத் தெரிவித்த வண்ணமே இருக்கின்றார்கள் .

அரசஅதிகாரிகளும் அதற்கான பதில்களை தெரிவித்தவண்ணம் இருக்கின்றார்கள்.

இதனை ஆய்வு செய்த சுற்றுச்சூழல் அதிகார சபையும், கடலோர வளங்கள் பாதுகாப்பு திணைக்களமும் அகழ்விற்கு ஓரளவு சாதகமான பதிலை வழங்கியிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. ஆனால், இந்த அறிக்கையில் மக்களுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றது.அரசு சார்ந்து இந்த அறிக்கை வந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்னும் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் இதற்கு எந்த அங்கீகாரத்தையும் வழங்கவில்லை.

இதன் காரணமாக நடவடிக்கை தடைப்பட்டு வருகின்றது .அவர்களது ஒப்பமும் பெறப்பட்டால் மறுகணமே இந்த அகழ்வு ஆரம்பிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

உண்மையிலேயே, இவ் அகழ்வு இடம்பெற்றால் கோரைக்களப்பு, விநாயகபுரம், பாலக்குடா, உமிரி, சங்கமன்கிராமம், தாண்டியடி, கோமாரி, மணல்சேனை, செல்வபுரம் ஆகிய தனித்தமிழ் ஏழைக் கிராமங்களின் ஐயாயிரம் குடும்பங்களுக்கு மேல் நேரடியாகப் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறப்படுகின்றது.

இது தடுத்து நிறுத்தப்படாவிட்டால் விரைவில் பாரிய வெகுஜன போராட்டத்தில் ஈடுபடவிருக்கிறார்கள் என மக்கள் செயற்பாட்டாளர்கள் சூளுரைத்துள்ளனர்.



# கறுப்பு பொன்நிறக் கற்களுடன் திருக்கோவில் இளைஞர் கைது

## புதையலில் தோண்டியபோது கிட்டியவையாம்

(பாறுக் ஷிஹான்)

புதையல் அகழ்வில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் எனக் கூறி கறுப்பு பொன்நிறக் கற்களை விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோரக்களப்பு குளத்திற்கருகில் தகவல் ஒன்றிற்கு அமைய நேற்று வெள்ளிக்கிழமை மாலை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் இக்கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோமாரி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர் வசம் இருந்து ரூபா 20 லட்சம் பெறுமதியான 350 துண்டுகள் அடங்கிய 113 கிராம் 180 மில்லி கிராம் எடையுடைய ஒரு தொகுதி கறுப்பு பொன்நிற கற்கள் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரை சான்று பொருள்களுடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக திருக்கோவில் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தினர்.





# மட்டு. புதூர் பிரதேசத்தில் கால்நடை வைத்திய முகாம்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரிகள் பிரிவினால்நடமாடும்சேவைநேற்று முதல்ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை மட்டக்களப்பு பிராந்திய கால்நடை வைத்தியர் திருமதி டுஜித்ரா லிங்கேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்போது மட்டக்களப்பு புதூர் பகுதியில் உள்ள பண்ணையாளர்களின் வீடுகளுக்கு நேரடியாக களவிஜயம் செய்து, லைசன்ஸ் அட்டை அடித்ததோடு, கால்நடைகளுக்கு தடுப்பூசியையும் வழங்கினர்.

# சிறுவர் மீதான துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு எதிராக விழிப்பூட்டும் செயற்றிட்டம் வாகரையில்!





சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள்மற்றும்துஷ்பிரயோகநடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத்திட்டங்களை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதற்கமைவாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியிலான இவ் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

'ஒரு நாளில் உன்னை மகிழ்விப்போம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மதுரங்கேணிகுளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ.குகதாசனின் ஒருங்கிணைப்பில் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரனின் வழிகாட்டலில்பிரதேசசெயலாளர் க.அருணன் தலைமையில், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜா ஏற்பாட்டில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது .

இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாகரை ஆதிவாசிகள் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், வீட்டை அடிப்படையாக கொண்ட பராமரிப்பின் முக்கியத்துவம், திணைக்களத்தினுடைய மாற்றுப் பராமரிப்பு தேசிய கொள்கைத் திட்டம், சிறுவர் பங்கேற்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. சிறுவர்களுக்கு எதிராக ஏற்படக்கூடிய சகலவிதமான துன்புறுத்தல்களையும் குறைக்கும் அல்லது தடுக்கும் வகையிலாக சமூக மட்டத்திலே கட்டமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும் வகையில்'கிராமிய மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு' மற்றும் 'சிறுவர் கழகங்களை' மீளமைப்புச் செய்வது, சிறுவர்களுக்கான படைப்பாக்க திறன் மற்றும் வாழ்க்கைத்தேர்ச்சி சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூறு சிறுவர்களும் பங்கு பெற்றிருந்தனர். அனைத்துச் சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இது போன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு பிரதேச செயலகமாகச் சென்று அங்கு காணப்படும் பின்தங்கிய கிராமங்களில் இந் நிகழ்வை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குழந்தைக்கு முன்வைத்து பாலியல் துஷ்பிரயோகம் கத்திமுனையில் உள்ளாக்கப்பட்டார் இளம் தாய்!

தனது 3 வயது குழந்தைக்கு முன்னால் இளம் தாய் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் பதிவாகியுள்ளது.

கடந்த 3.07.2022 அன்று 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை கணவன் வீட்டில் இல்லாத வேளை அவரது 3 வயது பிள்ளை பார்த்து இருந்த சந்தர்ப்பத்தில் அயலவர் ஒருவரால் கத்தி மூலம் அச்சுறுத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டார் என முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் குறித்த முறைப்பாட்டில் பாதிக்கப்பட்ட பெண் சுமார் ஒரு வயது மற்றும் 3 வயது பெண் குழந்தைகளின் தாய் என்பதுடன் மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் தனது வீட்டில் கணவன் இல்லாத நிலையில் மேற்படி பெண் சம்பவ தினமன்று தங்கி இருந்ததுடன் இரவு 7 மணியளவில் அத்துமீறி பிரவேசித்த நபர் ஒருவரால் 3 வயதான தனது மகள் பார்த்து கொண்டிருந்த வேளை கத்தி மூலம் அச்சுறுத்தப்பட்டு வலுக்கட்டாயமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டார் எனவும் அபயக்குரல் எழுப்பியும் எவரும் தன்னைக் காப்பாற்றவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளமையுடன் தன்னை துஷ்பிரயோகப்படுத்திய நபர் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சில பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருந்த போதிலும் குறித்த பெண் வழங்கிய முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்ட காரைதீவு பொலிஸ் நிலையம் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கான நீதியான நடவடிக்கை எடுக்க தவறி உள்ளதுடன் அப்பெண் தனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறு கோரி மனித உரிமை ஆணைக்குழுவிற்கு சென்று தஞ்சமடைந்துள்ளார். அத்துடன் வலுக்கட்டாயமாக தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபரிடம் இருந்து பாதுகாப்பு பெற்று தருவதுடன் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறிய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக கூறப்படும் இளம் பெண் முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டிற்கமைய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவால் சம்பவம் தொடர்பாக விசாரணை அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பெண் அண்மையில் வேறு மதத்திலிருந்து இஸ்லாம் மதத்துக்கு மாற்றலாகி வாழ்ந்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் நியமனங்களை விட மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதே சிறந்தது!

### இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையை இலங்கை பின்பற்ற வேண்டும் என்றும் ஆளுநர்கள் நியமனத்தைவிட மாகாண ஆட்சியை நிறுவுவதற்கான நகர்வுகள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

ஆளுநர் நியமனம் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலையில், ஆளுநர் நியமனங்களைவிட, மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக மாகாணங்களுக்கான அதிகாரம் என்பது ஆளுநர் ஊடாக அல்லாமல், மக்கள் ஊடாக தெரிவுசெய்யப்படும் முதல்வர் ஊடாகவே கையாளப்பட வேண்டும்.

அதிகாரங்களை முழுமையாகப் பகிரும் வகையில் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக வேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தாமல் இழுத்தடிக்கும் இலங்கை, தற்போது சீனக் கப்பலையும் நாட்டுக்குள் அனுமதித்துள்ளது.

எது எப்படி இருந்தாலும் இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையையே இலங்கை பின்பற்ற வேண்டும் –என்றார்.

## பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது தேசிய ஆள் அடையாள அட்டை அவசியமாம்!

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதபட்சத்தில் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும், குறித்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடக்கு விவசாய பணிமனையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள்

வடக்கு விவசாய பணிமனை முறைகேடுகள் தொடர்பில் விசாரணை செய்ய மூவர் கொண்ட விசாரணைக் குழுவை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் விசாரிப்பதற்காக ஆரம்ப புலனாய்வு விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை குழுவில் வட மாகாண சிறுவர் நன்னடத்தை அமைச்சின் கணக்காளர் விஷ்ணு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அதிகாரி சாந்தசீலன், வடமாகாண விதை உற்பத்திக் கூட்டுறவு நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சதீஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி தற்போதைய மட்டத்தில் பேண தீர்மானம்!

கொள்கை வட்டி வீதங்களை மாற்றங்களின்றி தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நிலையான வைப்பு வீதம் மற்றும் கடன் வசதிக்கான வீதம் என்பவற்றை முறையே 14.50 வீதம், 15.50 வீதம் ஆகவும் தொடர்ந்தும் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தினரினால் அவசரகால மனிதாபிமான உதவி வழங்கல்!









(நூருல் ஹூதா உமர்)

தற்போது பொருளாதார நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் அப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தொட்டுவாகலை தோட்டக்குடியிருப்பில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த 112 விதவைகள் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தால் வழங்கி வைக்கப்பட்டது. இதில் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் ஆலோசகர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதற்காக அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தின் தலைவர் பெரியநாயகி சிவராஜ், செயலாளர் சுகதேவ் வேலாயுதம், பொருளாளர் நடனசபேசன் முருகானந்தம், பாலமுருகன் சம்பந்தம், தினேஷ் கந்தசாமி, வசந்த் வல்வில் ஓரி, விஜயகுமார் மனோகரன் மற்றும் அங்கத்தவர்கள் இணைந்து இதற்கான நிதியுதவியை வழங்கியிருந்தனர். இதனை நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் மற்றும் ப்ரண்ஷிப் பவுண்டேஷன் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2022இல் வெளியிடப்பெற்றது.